
இறையரசு மலர

“அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 17 NOVEMBER - 2021 No. 11



**Dear Fathers, Brothers and Sisters...**

Month of November reminds us three important liturgical celebrations namely All Saints Day, All Souls Day and starting of Advent on $1^{st}$, $2^{nd}$, and $28^{th}$ consequently.

In Roman Catholicism and certain other Christian faith traditions, a saint is **a holy person who is known for his or her "heroic sanctity" and who is thought to be in heaven**. Saints are models for our spiritual journey. That is why each one who is baptized in Christianity is given a saint name as his patron to guard him, intercede for him and guide him in his spiritual path. Let us imitate our patron saint and try to be holy in all our endeavors.

**WISH YOU ALL A VERY HAPPY FEAST OF ALL SAINTS DAY**

All Souls day is a sign post for us to recede, reflect and rediscover who we are, what we are and where we are. All those who lived before us have set a model for us how to live this life. Let their model be a source of hope and faith to live this God given life meaningfully and joyfully and prepare ourselves to meet the Lord face to face in the next life. Let us pray for all the departed souls especially our bishops, priests, religious and laity who have served the diocese in their capacities. Let their soul rest in peace.

As we are going to begin Advent, the new liturgical year let us prepare ourselves for the forthcoming birth of Jesus and the synodal preparation in all the three levels: Diocese, Vicariate and Parishes. The Conference of Catholic Bishops of India has sent a circular regarding the celebration of **Communio Sunday** in the first Sunday of Advent. Kindly go through the circular and announce the people the importance of this Communio Sunday and ask them to contribute generously for this purpose. The money you

collect kindly send to the diocese so that we will send it to CCBI.

I take this opportunity to extend my sincere thanks for your kind cooperation to the diocese and appreciate for your wonderful ministry to our people. Kindly be assured of my prayers and seek your fervent prayers to me and to the diocese. I wish each and every one of our priests, religious those who celebrate their Birth Days and Feast Days in this month.
God bless

**Yours in Christ Jesus,**



**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

**Administrator's Programme:**

| | | | |
|---|---|---|---|
| 2 | Tue | M | All Souls Day Mass in the Cathedral, Vellore |
| | | E | All souls Day Mass in Old Town Cemetry |
| 4 | Thu | | Diamond & Golden Jubilee, Chithoor |
| 14 | Sun | | Concluding Mass, Year of St. Joseph, Shenbakkam |
| 20 | Sat | | RCM Schools Headmaster Meeting & Synodal preparation |
| 23 | Tue | | Mass at Sacred Heart Generalate, Rangapuram |
| 28 | Sun | | Confirmation, Vaniyambadi |

**Yours in Christ Jesus,**



**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

## COMMUNIO SUNDAY

**கம்யூனியோ இந்தியா (பணித்தோழமை இந்தியா)**
**ஞாயிறு - சுற்றறிக்கை**

**இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை (லத்தீன் ரீதி)**

நவம்பர் 28, 2021 (திருவருகைக்கால முதல் ஞாயிறு)

“நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் மற்றவரை அன்பு செய்யுங்கள்“ (யோவான் 13:34)

அனைத்துப் பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும், அருள்பணியாளர்களுக்கும், திருத்தொண்டர்களுக்கும், துறவியர்களுக்கும், வேதியர்களுக்கும் மற்றும் பொதுநிலையினருக்கும்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர, சகோதரிகளே,

1. நாம் திருவருகைக் காலத்தின் நுழைவாயிலில் நிற்கின்றோம். மனுவுருவாதல் என்னும் மறைபொருளைப் பற்றித் தியானிக்கும் இக்காலம் நமக்கு எதிர்நோக்கின் காலமாக அமைகின்றது. பெருந்தொற்று விட்டுச்சென்ற துன்பம், துயரம் மற்றும் வலிக்கு நடுவிலும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நம் வாழ்வை ஒளிர்விக்கிறது. இவ்வுலகம் தர இயலாத மகிழ்ச்சியையும், அமைதியையும் இது தருகிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அன்பின் ஆற்றலை நமக்கு வெளிப்படுத்தினார். திருஅவை தன்னுடைய கூட்டொருங்கியக்கத்தில் கிறிஸ்து வழங்கும் இப்புதிய வாழ்வுக்கு நம்மை அழைக்கிறது. கம்யூனியோ (பணித்தோழமை) ஞாயிறு கொண்டாடப்படும் இந்நாளில் நம் திருஅவையின் தன்மை மற்றும் பணி பற்றிப் புரிந்துகொள்கின்றோம்.

2. இன்னும் சில நாள்களில் புனித யோசேப்பு ஆண்டை நிறைவு செய்கின்றேம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ’தந்தையின் இதயத்தோடு’ (பாத்ரிஸ் கோர்தே) என்னும் திருத்தூது மடலில், புனித யோசேப்பின் தந்தையின் இதயம் கொண்டிருந்த பண்புகளைப் பட்டியலிடும்போது, ‘படைப்புத்திறத் துணிவுநிறை தந்தை‘ என அவரை

வரையறுக்கின்றார். 'படைப்புத்திறத் துணிவு', 'நாம் கடினமான சூழல்களைக் கையாளும் தருணங்களில் நம்மில் வெளிப்படுகிறது' என்று சொல்கின்றார் திருத்தந்தை. லூக் 5:17-26இல் முடக்குவாதமுற்ற ஒருவரை நான்கு நண்பர்கள் இயேசுவிடம் தூக்கிச் செல்கின்றனர். இயேசுவை அணுக முடியாத வண்ணம் சூழல் தடுத்தபோது, வீட்டின் கூரையைப் பிரித்த அவரை இயேசுவின் முன்பாக இறக்குகின்றனர். இதுவே 'படைப்புத்திறத் துணிவு.' இத்தகைய துணிவு கரங்களை இணைத்து, புதிய திட்டத்தை வகுத்து, அதைச் செயலாக்கம் செய்கிறது. விளைவாக, ஆபத்திலிருக்கும் மானுடம் புதுப்பிக்கப்பெற்று புதுவாழ்வு பெறுகிறது. திருஅவையில் நாம் ஒருவர் மற்றவரோடு கொண்டுள்ள கூட்டொருங்கியக்கத்தில், இப்படைப்புத்திறத் துணிவின் வழியாக, நாம் ஒருவர் மற்றவரை அன்பு செய்ய நம்மை அழைக்கிறது பணித்தோழமை ஞாயிறு.

3. 'பணித்தோழமை இந்தியா' (கம்யூனியோ இந்தியா) என்பது இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை (லத்தீன் ரீதி), 2018 ஆம் ஆண்டு தொடங்கிய முன்னெடுப்பு. விளிம்புநிலையிலும், கிராமப்புறங்களிலும் பணியாற்றும் மறைமாவட்டங்கள் மற்றும் துறவற சபைகளின் மேய்ப்புப் பணிக்குத் துணைநிற்கும் இவ்வமைப்பின் நோக்கம் பின்வருமாறு (அ) தேவையில் இருக்கும் நம் நாட்டின் சகோதர, சகோதரிகளோடு நமக்குள்ளதைப் பகிரும் கலாச்சாரத்தை வளர்த்து அவர்களுக்கு நம் உடனிருப்பைக் காட்டுவது. (ஆ) மறைத்தூதுப் பணித்தளங்களையும், மறைத்தூதுப் பணியாளர்களையும் தங்களுடைய செபத்தால் தாங்குமாறு நம்பிக்கையாளர்களைத் தூண்டி, அர்ப்பண வாழ்வுக்கான இறையழைத்தலை ஊக்குவிப்பது. (இ) மறைத்தூதுப் பணித்தளங்களில் தன்னார்வப் பணி செய்ய இறைமக்களைத் தூண்டுவது. மற்றும் (ஈ) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்னும் திருத்தூது ஊக்கவுரையில் குறிப்பிடுவதுபோல, பொதுநிலையினரை சீடத்துவத்திற்குப் பயிற்றுவிப்பது. 'பணித்தோழமை இந்தியா' வழியாக நாம் ஆற்றல்களைக் குவித்து, இறைவேண்டல் செய்து, செயலாற்றுகின்றோம்.

4. 'பணித்தோழமை இந்தியா' (கம்யூனியோ இந்தியா), ஆலயங்கள் கட்டுவது, அருள்பணியாளர் மற்றும் துறவியர் பயிற்சி நிலைக்கு

உதவி செய்வது, வேதியர்களுக்கு உருவாக்கம் தருவது போன்ற பல்வேறு தேவைகளுக்கு நிதியுதவி செய்கின்றது.

5. இந்த ஆண்டு 'கம்யூனியோ இந்தியா ஞாயிற்றை' திருப்பலியில் பங்கேற்றுச் சிறப்பாகக் கொண்டாடுவோம். இன்றைய இரண்டாம் வாசகம் (1 தெச 3:12-4:2) இந்த நாளின் கருத்தை மிக அழகாகத் தன்னகத்தே கொண்டுள்ளது: 'நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லாருக்காகவும் கொண்டுள்ள அன்பை ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக! நாம் நம் அன்பை ஒருவர் மற்றவருக்குக் காட்டும் தளமாக 'கம்யூனியோ இந்தியா' அமைவதாக!

6. உங்களுடைய தாராள உள்ளத்திற்காகவும் பெருந்தன்மைக்காகவும் இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை உங்களுக்கு இத்தருணத்தில் நன்றி கூறுகின்றது. 'உங்களுள் இத்தகைய நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறுச் செய்வார்' (பிலி 1:6) என நாங்கள் நம்புகின்றோம். அவருடைய முதல் வருகையை நினைவுகூர்ந்து கொண்டாட நம்மையே தயாரிக்கும் நாம், அவருடைய இரண்டாம் வருகைக்காக குன்றா எதிர்நோக்குடன் காத்து நிற்கின்றோம்.
மறைத்தூதுப் பணியின் விண்மீன் நம் அன்னை கன்னி மரியா, அகில உலகத் திருஅவையின் பாதுகாவலர் புனித யோசேப்பு நமக்காகப் பரிந்து பேசுவார்களாக!

இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவைச் செயலகம், 1 நவம்பர் 2021, புனிதர் அனைவர் பெருவிழா

+மேதகு **பிலிப் நேரி ஃபெர்ராவோ**
தலைவர், இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை
பேராயர், கோவா மற்றும் டாமன்

+ மேதகு **ஜார்ஜ் அந்தோணிசாமி**
துணைத் தலைவர், இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை
பேராயர், சென்னை - மயிலை

+மேதகு **அனில் ஜோசப் தாமஸ் குட்டோ**
பொதுச் செயலர், இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை
பேராயர், டில்லி

இச்சுற்றறிக்கை நம் அனைத்து மறைமாவட்டங்களின் பங்குத்தளங்கள் மற்றும் துறவு இல்லங்களில், 28 நபம்பர் 2021 (திருவருகைக்காலம் முதல் ஞாயிறு) அன்று வாசிக்கப்பட வேண்டும்.

## SYNODAL PROCESS - 2021 - 2023

**Dear Fathers, Brothers and Sisters**
**Greetings to all of you from the Diocese of Vellore**

Hope and pray that you are doing well. We are all well aware that Pope Francis has opened a two-year synodal journey that will unfold itself in three phases: diocesan, continental and universal ... of consultations and prayerful discernment, culminating with the XVI Ordinary General Assembly of Synod of Bishops in October 2023, in Rome.

The Theme of the 2023 Synod is, "**For a Synodal Church: Communion, Participation and Mission.**" This synodal journey will commence both in the Vatican and in the Local Churches. Our Holy Father Pope Francis has inaugurated the Synod in the Vatican, on October 9-10, 2021, with a time for reflection, prayer and celebration of the Eucharist. All the bishops are asked to open this synodal process on October 16-17 in their respective dioceses. The CCBI Commission has taken up this task and executes this synodal preparation through each diocesan Co-coordinator with his team under the guidance of CCBI Coordinator Rev. Fr. Francis Gonzalves SJ.

In our diocese we have formed a 7 members team for this synodal preparation. The team will be:

**President** : Rev. Msgr. I. John Robert,
Diocesan Administrator
**Coordinator** : Rev. Dr. L. Ramesh Antony,
Director, CPC

**Team**

1. Rev. Fr. Sundar SDB., Rector, Don Bosco, Gandhinagar, Katpadi, Vellore.
2. Rev. Dr. Jagadish, Rector, St. Francis Xavier Seminary, Veppoor (Judicial Vicar)
3. Rev. Fr. Panneer Selvam, Vicar Forane, Vandavasi (Sec. Liturgy Commission)
4. Rev. Dr. Mangala David, Correspondent, Veppoor Matri. School (Moral Theologian)
5. Rev. Fr. Thangaraj, Parish Priest, Shenbakkam, (Sec. Ecumenism)
6. Mr. Belevendiram, H.M. Don Bosco Primary school, Vellore, (Sec. Laity Commission)

**Programs**

**Diocesan Level**

1. Inauguration of the Synod 2021-2023 on **Thursday, 28 October 2021**
2. Conference on Synod for Diocesan priests in December 2021
3. Conducting seminar for Teachers, Catechists, CRI and ecumenism & Inter-religious in January 2022
4. Pre-synod celebration in the diocese - February 2022
5. Consolidated Report to CBCI in March

**Vicariate Level**

1. Monthly Recollection on Synod to Vicariate priests in November 2021
2. Formation of coordinators (3 Priests) in November 2021
3. Discussion on Synodal questions during monthly recollection
4. Discussion on Synod with DPC and Anbiyam leaders

**Parish Level**

1. Announcing the synodal process to the people on Sunday, **24 October 2021**
2. Inaugural mass in each parish preferably on **Sunday, 31 October 2021** or as per their convenience
3. Conducting discussion on synodal questions in BCC, Parish Council & youth levels **in January 2022**
4. Consolidated report to be sent to the diocesan team **in January 2022**

Dear Fathers,

I kindly request you to take up this task seriously and prepare our people for the meaningful and fruitful understanding of synodal processes by our prayers and discussions. For the diocesan level inauguration of the Synod on **Thursday, 28 October 2021** I cordially invite all the priests, Vice-President of each Parish council and religious of Vellore Vicariate to take part in this historical beginning of Synod 2021-2023 that takes place in our diocese. The program will be:

1. 6:00 pm - Rosary
2. 6:20 pm - Vesting
3. 6:30 pm - Inauguration of Synod followed by Eucharistic celebration.

**What to be done**:

1. Announcing the synodal process to people on **Sunday, 24 October 2021**.
2. Kindly take part in the diocesan level inauguration on **Thursday, 28 Octorber, 2021**
3. The prayer cards will be sent to you. You can start praying the synodal prayer in each mass
4. In the month of November all the 8 Vicars Forane fix up a date for your Vicariate monthly recollection

with the coordinator and ask all the priests of your Vicariate to take part in this synodal process for a meaningful preparation and fruitful discussion. The diocesan coordinator will contact you to fix up the dates.

5. Each Parish priest kindly prepare your people for this synodal process by conducting the discussions on the given questions in BCC, Parish council, and youth.
6. The 7 members team will come in two groups to the Vicariate monthly recollection and give the talk on Synod and conduct the discussion on synodal questionnaire.

For any help you can contact the diocesan coordinator or he will contact you for any further information.

**Important Note**:

Dear fathers, considering the danger of big gathering of priests in one place for 5 days in this Pandemic time the council that held on 6 October, 2021 has decided to have the priests' annual retreat personally like last year. Hence, all the priests are asked to inform the Administrator where and when you are making the retreat.

I take this opportunity to thank each and every one of you for your wonderful cooperation and collaboration in all the levels. Wish you all a fruitful recollection and synodal preparation. Kindly be assured of my prayers for you and for your parishioners.

God bless,

**Yours in Christ Jesus,**



**Very Rev. Msgr. I. John Robert,**
**Diocesan Administrator**

## PROCURATOR'S OFFICE

### Good Friday Collection

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Devigapuram | 3800 |
| | Total | 3800 |

Thanks for all those who have alredy remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

### MISSION SUNDAY COLLECTION - 2020

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Pulavanbadi | 4450 |
| 2 | Pulivanandal | 5310 |
| | Total | 9760 |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not yet sent Mission Sunday Collection,

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

## குடும்பநலப் பணிக்குழு

திருமணத் தயாரிப்பு வகுப்புகள்

அன்பு பங்குத்தந்தையர்களே!

உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!

திருமணத் தயாரிப்பு வகுப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து தங்கள் பங்கு இளையோர்களை தவறாமல் அனுப்பிவைப்பதற்காக உங்களை மனதார பாராட்டுகிறேன்.

தற்போது 80% பங்கைச் சார்ந்த இளையோர் திருமணத் தயாரிப்பு வகுப்பில் தவறாது பங்கு கொள்கின்றனர். இன்னும் இருக்கின்ற 20% பங்குகள் பங்கு கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். எனவே பங்குத்தந்தையர்கள் தங்கள் பங்கு இளையோரை உற்சாகப்படுத்தி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

நவம்பர் மாதம்

06.11.2021 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
20.11.2021 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை

டிசம்பர் மாதம்

04.12.2021 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
18.12.2021 ஆயர் இல்லம், வேலூர்
நேரம் : காலை 9.00 முதல் மாலை 4.00 மணிவரை

குறிப்பு : முக கவசத்தோடு திருமண வகுப்பிற்கு வரவும்.

தொடர்புக்கு : பேரருட்பணி **L.இரமேஷ் அந்தோணி** - 98948 91490
திரு. **சாமுவேல்,** வேதியர் - 90478 90703

அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## VELLORE & THIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

19.10.2021 இன்று **VSSS** கருத்தரங்கு கூடத்தில் எழுவோம் இயக்கத்தின் “புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு” திட்ட மேலாளர் திரு அ.பேட்ரிக் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. இதில் 30 தன்னார்வ தொண்டர்கள் மற்றும் மகளிர் அமைப்பு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். புற்றுநோய் எதனால் ஏற்படுகிறது? கடைப்பிடிக்க வேண்டிய உணவுமுறைகள், தவிர்க்க வேண்டிய பழக்கங்கள், புற்றுநோய் ஏற்பட்டப்பின் அதற்காக மன

அழுத்தம் ஏற்படாமல் அதிலிருந்து விடுபட தேவையான மருத்துவ முறைகளை கையாள்வது போன்ற விளக்கமும், குறிப்பாக இந்த மாதம் மார்பக புற்றுநோய் தடுப்பு மாதம் என்பதால் பாதிக்கப்பட்ட பெண்கள் அதை சரி செய்ய முயல வேண்டும் என்றும் எடுத்துக்கூறி, அணுக வேண்டிய மருத்துவர்கள் பற்றியும், அவர்களை சந்திக்க ஏற்பாடு செய்யவும் உறுதி அளிக்கப்பட்டது. **VSSS** பணியாளர்களும் கலந்துக்கொண்டு பயன் அடைந்தனர்.

## HUNGER AND DISEASE FUND COLLECTION - 2021 DIOCESE OF VELLORE

| S.NO. | DATE | PLACE | AMOUNT RS. |
|---|---|---|---|
| 1 | 28.10.2021 | Devikapuram | 3,200 |

செய்தி தொகுப்பு
திரு. **A.பேட்ரிக்**
VSSS திட்ட மேலாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ், MSW**
இயக்குநர், VSSS & TVMSSS
ஆயர் இல்லம், வேலூர்

குறிப்பு : பெரிய வியாழன் **(HUNGER AND DISEASE FUND)** இதுவரை செலுத்தாத பங்கு தந்தையர்கள் **VSSS** அலுவலகத்தில் செலுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி தொகுப்பு
திரு. **V.S.பேட்ரிக்**
ஒருங்கிணைப்பாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ், MSW**
இயக்குநர், கோல்பிங் இந்தியா
ஆயர் இல்லம், வேலூர்.

## கோல்பிங் இந்தியா

27.10.2021 புதன்கிழமை முத்திபேறு பெற்ற அடால்ஃப் கோல்பிங் தினவிழா **VSSS** கருத்தரங்கு கூடத்தில் சிறப்பிக்கப்பட்டது. இதில் செபவழிபாடு கோல்பிங் உறுப்பினர்களால் நடத்தப்பட்டது. **VSSS** இயக்குநர் பேரருட்திரு. **S.**ஜேம்ஸ் அவர்கள் வாழ்த்துரையும், கருத்துரையும் வழங்கினார்கள். கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. **V.S.**ஜார்ஜ் அவர்கள் திட்ட விளக்கம் பற்றி எடுத்துக் கூறினார். திட்ட மேலாளர் திரு **A.**பேட்ரிக் அவர்கள் கோல்பிங் வாழ்க்கை வரலாறு பற்றி சிறப்புரை வழங்கினார். பங்குகொண்ட அனைத்து

உறுப்பினர்களும் கோல்பிங் அவர்களின் திரு உருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

VSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ் அவர்கள் **"மழைநீர் சேகரிப்பு" (Rain Water Harvesting)** திட்டத்தின்கீழ் 5 கோல்பிங் உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் திட்டத்திற்கான காசோலையை வழங்கினார். 40 கோல்பிங் உறுப்பினர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இறுதி செபத்துடன் கூட்டம் முடிவுப்பெற்றது. 40 கோல்பிங் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டு பயன் அடைந்தனர்.

| | |
|---|---|
| செய்தி தொகுப்பு | பேரருட்திரு. **S.ஜேம்ஸ், MSW** |
| திரு. **V.S.ஜார்ஜ்** | இயக்குநர், கோல்பிங் இந்தியா |
| ஒருங்கிணைப்பாளர் | ஆயர் இல்லம், வேலூர். |

## புனித வின்சென்ட் தே பவுல்

31.08.2021 செவ்வாய் புனித வின்சென்ட் தே பவுல் வேலூர் மத்திய சபை வளர்ச்சி மற்றும் வெள்ளி விழா நிகழ்வுகள் குறித்து நமது வேலூர் மறைமாவட்ட பரிபாலகரும், மத்திய சபையின் ஆன்மீக ஆலோசகருமான பேரருட்திரு I.ஜான்ராபர்ட் அடிகளாரை சந்தித்து பேசப்பட்டது. தொய்வடைந்துள்ள சபைகளை துரிதப்படுத்தி முனைப்புடன் செயல்பட கலந்தாலோசிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பங்குத்தந்தையர்களோடு கலந்து பேசி சபை செயல்பாடுகள் சிறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இச்சந்திப்பில் மத்திய சபை தலைவர் ம.சார்லஸ் ஆரோக்கியராஜ், ம.ச.துணைத் தலைவர் அ.தோமினிக், செயலர் அந்தோணி, பொருளாளர் மு.ஜெயபால், சகோ. ச.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சபை கையேடு தேர்வு

வேலூர் மத்திய சபையில் தேர்வான சபை கையேடு தேர்வில் (22.8.2021 ஞாயிறு) கலந்துகொண்ட மூவரில் செல்வன் சு.சாய் ஜெபர்சன், வேலூர், திருமதி. ப.எடல் மோனிஷா, போளூர், செல்வி. ச.மரிய மெர்லின், கணியம்பாடி ஆகியோர் தேர்வு பெற்றனர். இவர்களின் தேர்வுத்தாள் தமிழக மண்டல சபைக்கு

அனுப்பப்பட்டது. இதில் வேலூர் மத்திய சபை சார்பில் முதலிடம் போளூர் திருமதி. எடல் மோனிஷா 83.50 மதிப்பெண்களும், கணியம்பாடி செல்வி. மரிய மெர்லின் 78. 50 மதிப்பெண்களும், வேலூர் செல்வன். சாம் ஜெபர்சன் 77.50 மதிப்பெண்களும் பெற்று வேலூர் மத்திய சபையில் முதல் மூன்று இடங்களை பெற்றனர். தமிழக வடக்கு மண்டல அளவில் வேலூர் திரு இருதய கிளை சபையை சார்ந்த திருமதி. எடல் மோனிஷா மூன்றாவதாக வெற்றி பெற்றார் என்பதை தெரிவித்து பாராட்டி மகிழ்கின்றோம். இத்தேர்வுகளில் பங்குபெற்றவர்களையும், பயிற்றுவித்த கிளை சபை, வட்டார, மத்திய சபை பொறுப்பாளர்களுக்கு நன்றியும், வாழ்த்துக்களும்.

## மேல் புதுப்பாக்கம்

புதிய கிளை சபை 26.9.2021 வேலூர் மத்தியச்சபைக்குட்பட்ட சேத்துப்பட்டு வட்டார சபைக்குட்பட்ட மேல் புதுப்பாக்கம் தூய இருதய ஆண்டவர் கிளைச்சபை பங்குத்தந்தை ஆனந்தராஜ் அடிகளார் தலைமையில் தொடங்கப்பட்டது. சேத்துப்பட்டு வட்டார செயலர் ஜான் ஜோசப், சேத்துப்பட்டு கிளை சபைத் தலைவர் இயேசு பாதம், பொருளாளர் சாம்சன் முயற்சியினால் தொடங்கப்பட்டது. புதிய கிளைச் சபையின் தலைவராக சகோ. லாரன்ஸ் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். புதிய உறுப்பினர்களாக பத்து பேர் சேர்ந்துள்ளனர்.

## வேலூர் வட்டார சபை தேர்தல்

26.9.2021 ஞாயிறு மாலை 3 மணியளவில் வேலூர் வட்டார சபை தலைவர் தேர்வு, மத்திய சபை தலைவர் சகோ. சார்லஸ் ஆரோக்கியராஜ், தலைமையில் மத்திய சபை அலுவலகத்தில் நடைபெற்றது. சகோ. தோமினிக் தேர்தல் அலுவலராக பணியாற்றி தேர்தல் விதிமுறைகளை எடுத்துக் கூறி விளக்கினார். மத்திய சபை செயலர் சா.அந்தோணிராஜ், பொருளாளர் மு.ஜெயபால் முன்னிலையில் நடைபெற்ற இத்தேர்தலில் ஒன்பது கிளை சபை தலைவர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் ஏகமனதாக சகோதரி அ.கிளாரா மெட்டில்டா, வேலூர், அவர்கள் வேலூர் வட்டார சபைத்

தலைவியாக தேர்வு செய்தனர். பள்ளிகொண்டா சகோ. பீட்டர் முன்மொழிய ஓல்டு டவுன் சகோ. அருளப்பன் வழிமொழிந்தார். திருமதி கிளாரா மெட்டில்டா ஏற்புரை வழங்கி அனைவருக்கும் நன்றி கூறினார்.

## புனித வின்சென்ட் தே பவுல் திருவிழா, கணியம்பாடி

27.9.2021 திங்கட்கிழமை காலை திருப்பலியுடன் திருவிழா தொடங்கியது. பங்குதந்தை S. அன்பழகன் அடிகளார் திருப்பலி நிறைவேற்றினார். சபையில் உழைத்து மரித்த மூத்த தலைவர்கள் அந்தோணி கெம்புராஜ், எம்.இருதயராஜ், ஜி.இருதயராஜ் கே.ஜே.அந்தோணிசாமி, பள்ளிகொண்டா துரை போஸ்கோ, லூர்துசாமி, ஜெயசெல்வன், திருவண்ணாமலை ஜேசுதாஸ் ஆகியோருக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் அருள் சகோதரிகள் இல்லத்தில் ஏழை-எளிய, தேவையில் உள்ளவர்களுக்கு புடவைகள் மற்றும் அரிசி ஐந்து கிலோ பங்குத்தந்தை S.அன்பழகன் தலைமை அருட்சகோதரி ஜெயச்சந்திரா, வேலூர் மத்திய சபை தலைவர் மா.சார்லஸ் ஆரோக்கியராஜ் மற்றும் கிளை சபை பொறுப்பாளர்கள் இணைந்து வழங்கப்பட்டது. 20 பயனாளிகள் பயனடைந்தனர்.

## புனித லூர்து அன்னை சபை சேத்துப்பட்டு

27.9.2021 திங்கட்கிழமை புனிதரின் விழா பேராலய அதிபர்தந்தை விக்டர் இன்பராஜ் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக புலவர் டாக்டர். ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார். முன்னதாக திருத்தல அதிபர் தந்தை திருப்பலி நிறைவேற்றினார். கிளைசபைத் தலைவர் இயேசுபாதம், சாம்சன், எல்லப்பன், ஜான் ஜோசப் மற்றும் உறுப்பினர்கள் இணைந்து ஏழை எளியோருக்கு உதவிகள் செய்தனர். இதனால் 30 பேர் பயனடைந்தனர்.

| | |
|---|---|
| பேரருள்திரு. **ஜெ.ஜெயபிரகாசம்** | **ம.சார்லஸ் ஆரோக்கியராஜ்** |
| இயக்குநர், பக்த சபைகள் | தலைவர், வேலூர் மத்திய சபை |

மறைவட்ட செய்திகள்

## TWIN CELEBRATION



**Don Bosco Parish, Jamunamarathur, Jawadhi Hills**

***"I am uneasy at heart; I forget that there abides the old in the new, and that there thou also abidest."***
***Rabindranath Tagore : Gitanjali LXIII***

The celebration of the First Holy Communion to 7 of our children and Holy Confirmation to 10 of our children and an adult took place on October 3, 2021. The Diocesan Administrator of Vellore Diocese Very Rev. Msgr. I. John Robert administered the Sacraments.

**Preparation:**

This sweet and holy day did not dawn all at a trance. More than a month the preparation classes went on. On August 15th Rev. Fr. Jerald Majella inaugurated the Catechism Classes. Rev. Sr. Annarani FMA was teaching thrice a week the classes for them. As the school began on September 1st the Catechism Classes could not be conducted as regularly as before. Thus from September

1st a Whatsapp group with the name **"JMRcatechism kids"** was formed and we organized classes online through zoom meetings and on the weekends the classes were taken more intensely. The kids learnt the catechism with much enthusiasm.

**Retreat and confession:**

To make this celebration to be a life time God experience for them, Rev. Fr. Majella- Parish Priest arranged a day of retreat. Rev. Fr. Regan SDB, the former Parish Priest preached the retreat and administered Sacrament of Confession for them. It was a beautiful experience indeed.

**Celebration:**

The celebration began as the Diocesan Administrator of Vellore Diocese Very Rev. Msgr. I. John Robert blessed the children and the entrance procession led by dancing steps of the children led the celebrants to the Altar. Mangala Aarathi that welcomed the guests expressed our deep hearted love, joy and gratitude to our Beloved Diocesan Administrator Very. Rev. Msgr. I. John Robert.

The Recipients of the Sacraments actively participated in the celebration like reading, singing the response, offering along with the prayer of the faithful and singing the thanksgiving song with lighted candle.

The children and all the parishioners had a profound God experience and immense joy. Heartfelt thanks to the Diocesan Administrator of Vellore Diocese Very Rev. Msgr. I. John Robert and Rev. Fr. Sigamani his secretary,

Rev. Fr. Leo Arockiam SDB, Vicar Forane of Polur Vicariate, Rev.Fr. Majella, our parish priest, Rev. Fr. Vinod, Rev. Fr. Sagaya Raj, Rev. Fr. Regan and Rev. Fr. Paul Mark who concelebrated the mass and blessed our children.

A special thanks also to Rev. Fr. Majella our Parish Priest who took extraordinary effort and everything.

**Rev. Sr. Annarani FMA,**
**Catechism Instructor**

**புனித கார்மேல் மலை மாதா பங்கு, இளையாங்கண்ணி**





புனித கார்மேல் மலை மாதா பங்கு இளையாங்கண்ணியில் 13.10.2021 அன்று உறுதிப்பூசுதல் கொண்டாட்டம் நடைபெற்றது. நமது வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் தந்தை பேரருட்திரு ஐ. ஜான் இராபர்ட் அவர்கள் கொண்டாட்டத்திற்கு தலைமையேற்றார்.

பங்குதந்தை அருட்பணி அ. சார்லஸ் இயேசுதாஸ், தாளாளர் தந்தை அருட்பணி அ. பவுல் வேளாங்கண்ணி அருட்கன்னியர்கள், பங்கு மக்கள், உறுதிபூசுதல் பெறும் மாணவச் செல்வங்கள் அனைவரும் இணைந்து பரிபாலகர் தந்தை அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர். மேளதாளத்துடன் பவனியாக கன்னியர் இல்லத்தில் இருந்து பங்கு தேவாலயத்திற்கு பல்லக்கில் அழைத்துவரப்பட்டார். வருகை பவனியின்போது உறுதிப்பூசுதல் பெறும் மாணவிகள் மங்கள ஆரத்தி எடுத்து பரிபாலகர் தந்தை அவர்களையும் மற்ற அருட்தந்தையர்களையும் திருப்பலிக்கு வரவேற்றனர். பெந்தக்கோஸ்து நாளன்று நெருப்பு வடிவில் இறங்கிய தூய ஆவியின் துணைவேண்டி பரிபாலகர் தந்தை, பங்குத்தந்தை, பெற்றோர், ஞானபெற்றோர் மற்றும் உறுதிப்பூசுதல் பெறுவோரின் பிரதிநிதிகளும் குத்துவிளக்கு ஏற்றினர். 150 மாணவச் செல்வங்கள் இணைந்து எரியும் திரிகளுடன் தங்களது திருமுழுக்கு வார்த்தைப்பாட்டை புதுப்பித்தனர். பரிபாலகர் தந்தை அவர்கள் அனைவரையும் பாராட்டியபின் மாணவச் செல்வங்களின் மறைக்கல்வி அறிவை சோதித்தார், துணிவுடன் பதிலளித்த அனைவரையும் சிறப்பாக பாராட்டினார்.

150 மாணவச் செல்வங்கள் தூய ஆவியை முழுமையாகப் பெற்ற நிகழ்வு பங்கு மக்கள் அனைவரையும் தூய ஆவியார் ஆசீர்வதித்த உணர்வை ஏற்படுத்தியது. காணிக்கை பவனியிலும், நற்கருணை பவனியிலும் அனைவரும் ஆர்வமுடனும் பக்தியுடனும் பங்கேற்றனர். இறுதியில் பங்குத்தந்தை அனைவருக்கும் நன்றி கூறினார். உறுதிபூசுதல் பெற மாணவச் செல்வங்களை திறம்பட தயாரித்த அருட்சகோதரி ஜான்சி அவர்களுக்கு பங்கு மக்கள் சார்பாக சிறப்பான நன்றி தெரிவிக்கப்பட்டது.

உறுதிப்பூசுதல் பெற்ற மாணவச் செல்வங்கள் அருட் தந்தையர்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டனர். ஜெபமாலை மாதத்தில் அனைவருக்கும் ஜெபமாலை ஜெபிக்க வேண்டும் என்ற அறிவுரையுடன் பரிபாலகர் தந்தை அவர்கள் 150 மாணவ செல்வங்களுக்கும் ஜெபமாலை வழங்கினார்.

அன்னைமரி உடன் இணைந்து தூய ஆவியை பெற்ற திருத்தூதர்களைப் போன்று அனைவரும் மகிழ்வுடன் இல்லம் சென்றனர்.

என்றும் அன்புடன்,
அருட்பணி **சார்லஸ் யேசுதாஸ்**
மற்றும் இறைமக்கள்,
இளையாங்கண்ணி.

## பாகாயம் குழந்தை இயேசு பங்கில் புனித லூர்து அன்னை கெபி அர்ச்சிப்பு விழா

21.10.2021 வியாழன்கிழமை மாலை 6.00 மணிக்கு வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட் தந்தை I.ஜான்ராபர்ட் அவர்களுக்கு எமது பாகாய பங்கு தந்தை அருட்தந்தை N.T.இருதயராஜ் அவர்கள் மாலை அணிவித்து பங்கு மக்களோடு சேர்ந்து வரவேற்றார். பின்னர் பரிபாலகர் தந்தை புதியதாக கட்டப்பட்டிருந்த லூர்து அன்னை கெபியையும்,



அதன் பின்புறம் வைக்கப்பட்டிருந்த ஆரோக்கிய அன்னை திருவுருவத்தையும் ஆசி கூறி புனிதப்படுத்தினார். பின்னர் பங்குதந்தை, ஆயர் இல்ல செயலர் தந்தை அருட்திரு சிகாமணி பரிபாலகருடன் கூட்டு பாடற்திருப்பலி நிறைவேற்றினார்கள்.

திருப்பலி இறுதியில் அன்பிய பொறுப்பாளர் திரு. J.செல்வராஜ் பங்கின் சார்பாக எல்லோருக்கும் நன்றி கூறினார். அன்னையின் கெபியை நேர்ச்சியாக கொடுத்த திரு. **A.**ஜான்சன், திருமதி ஜான்சி T.R குடும்பத்தாருக்கு தனிப்பட்ட நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. கெபியை கட்டிக்கொடுத்த குடும்பத்தார் இனிப்பு வழங்கி மகிழ்வித்தனர்.


| | |
|---|---|
| என்றும் அன்புடன், | வேதியர் |
| அருட்பணி N.T.**இருதயராஜ்** | T.S.**அந்தோணி** |
| பங்கு தந்தை பாகாயம், | பாகாயம் |

**வேலூர் மறைமாவட்ட ஆயர் மாமன்ற துவக்கவிழா**









காலத்தின் அறிகுறிக்கேற்ப திருஅவை தனது வாழ்வையும் பணியையும் குறித்து அனைத்து நிலையினருடன் விரிவாக விவாதித்து செயல்முறை திட்டங்களை வரையறுத்துச் செயல்படுத்தவும், தன்னைப்பற்றியே புரிந்துகொள்ளவும் முன்னெடுக்கும் ஒரு மகத்தான முயற்சியே இந்த உலக ஆயர்கள் மாமன்றம். அகில உலகத்தின் தொடக்க நாளாக திருத்தந்தை பிரான்சிஸ் அக்டோபர் 9, 10 நாளில் ஆயர்கள் மாமன்றத்தை தொடங்கிவைத்தார். நமது வேலூர்

மறைமாவட்டத்திலும் மறைமாவட்ட குருக்கள், இருபால் துறவியர்கள், வேதியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் இணைந்து வந்து மறைமாவட்ட விண்ணேற்பு பேராலயத்தில் ஆயர்மாமன்றம் 2021 - 2023, 28 அக்டோபர் அன்று தொடங்கப்பட்டது. இந்த துவக்க விழாவிற்கு நமது வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு. I.ஜான் ராபர்ட் அவர்கள் தலைமை தாங்கினார். முதலில் ஆயர் மாமன்றத்தின் நோக்கத்தை முன்னுரையாக வேலூர் மறைமாவட்ட ஆயர்மாமன்ற ஒருங்கிணைப்பாளர் பேரருட்திரு. ரமேஷ் அந்தோணி வழங்கி அனைவரையும் வரவேற்றார். பின்பு ஆயர் மாமன்ற இலட்சினையை காணொளியின் வழியாக அனைவருக்கும் தெளிவாக விளக்கப்பட்டது. இணைந்து பயணித்தல் என்பதே ஆயர்மாமன்றத்தின் கருப்பொருள். ஆதலால் பயணத்திற்கு மிகவும் தேவையானது ஓர் இலக்கு. இந்த உலக ஆயர்கள் மாமன்ற நோக்கத்தையும், கருத்தையும் விளக்கும் இலட்சினையை (ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு) மறைமாவட்ட பரிபாலகர் அவர்கள் திறந்து வைத்து மாமன்றத்தை தொடங்கி வைத்தார். ஒளியான கிறிஸ்துவின் பிரசன்னம் ஆயர்மாமன்ற நிகழ்வு முழுவதும் வழிநடத்த மறைமாவட்ட பரிபாலகர், பேராலயத்தின் பங்குத்தந்தை பேரருட்திரு. ஜோ லூர்சாமி, பங்குப்பேரவையின் துணைத்தலைவர் திரு. அருள்ராஜ், இளையோரின் பிரதிநிதி செல்வி ரூபி, துறவறத்தாரின் பிரதிநிதி அருட்சகோதரி அலங்காரம் ஆகியவர்கள் குத்துவிளக்கை ஏற்றினார்கள். பின்பு மறைமாவட்ட பரிபாலகர் 'தூய ஆவியாரே! உம் திருப்பெயரில் கூடியுள்ள நாங்கள்' என்ற வார்த்தைகளுடன் தொடங்கும் இம்மாமன்றத்திற்கான இறைவேண்டலை தொடங்க அனைவரும் இணைந்து செபித்தனர். துவக்க நிகழ்விற்கு பிறகு மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு. I.ஜான் ராபர்ட் அவர்கள் தலைமையில் ஆடம்பர கூட்டுத்திருப்பலி நடைபெற்றது. திருப்பலியில் பேரருட்தந்தை சுந்தர் ச.ச. தொன்போஸ்கோ, இல்லத்தந்தை ஆயர்மாமன்றத்தின் நோக்கம், செயல்பாடுகள், இம்மாமன்றத்தின் வழியாக திருத்தந்தையின் எதிர்பார்ப்புகள், இம்மாமன்றத்தின் செயல்பாடுகளில் நமது பங்களிப்பை பற்றி இறைவார்த்தையின் ஒளியில் எடுத்து கூறி மறையுரை ஆற்றினார். திருப்பலியின்

இறுதியில் மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்திரு. I.ஜான் ராபர்ட் அவர்கள் வேலூர் மறைமாவட்டத்தில் ஆயர்மாமன்ற நிகழ்வுகள் மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும், பங்குத்தளங்களிலும், அன்பியங்களிலும் மற்ற இயக்கங்களிலும், துறவற இல்லங்களிலும் சிறப்பாக நடைபெற அனைவரும் கலந்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வேலூர் மறைமாவட்ட இறைச்சமூகமாக அனைவரும் இணைந்து பயணிப்போம் என்ற அறைகூவலோடு துவக்கவிழாவை நிறைவுச் செய்தார். துவக்க விழாவில் கலந்துக்கொண்ட அனைவரும் அன்பின் விருந்தில் கலந்துக் கொண்டு வீடுத் திரும்பினர்.

அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
ஆயர்மாமன்ற ஒருங்கிணைப்பாளர்

## VEPPOOR

**Dear Fathers, Brothers and Sisters,**

This is the Church's traditional prayer to Queen of Heaven. The history is given to explain the miraculous power of reciting this prayer. In this pandemic time let us pray this prayer to Queen of Heaven. This card is prepared by Rev. Fr. Albin Justus, Parish Priest, Holy Cross Church , Veppoor. I thank him for the same. Let us recite this prayer in our homes and enjoy the power of it.

**Prayer**

August Queen of the Heavens, Heavenly Sovereign of the Angels, thou who from the beginning received from God the power and the missionto crush the head of Satan, we humbly beseech thee, to send thy holy Legions so

that,under thy command and through thy power, they may pursue the demons, combat them everywhere, suppress their boldness and drive them back into the abyss. ”Who is like unto God?”O good and tender Mother, thou shalt always be our love and our hope!O Divine Mother, send thy holy Angels to defend us and drive far away from us the cruel enemy. Holy Angels and Archangels, defend us and guard us. Amen.

Prayer indulgenced by St. Pius X on 8 July 1908. Original text from the prayer dictated by Our Lady to Fr. Cestac on 13 January 1864. It is recommended to learn it by heart.

**History of the Prayer**

On 13 January 1864, Father Louis Cestac (founder of the Congregation of the Servants of Mary,died in 1868), accustomed to the goodness of the Most Blessed Virgin, was suddenly struck by a ray of divine light. He saw the devils scattered throughout the earth, causing inexplicable ravages. At the same time, he had a vision of the Most Blessed Virgin. This good Mother told him that indeed the devils were let loose in the world, and that the hour had come to pray to her as Queen of the Angels, asking to send the holy Legions to fight and put an end to the powers of Hell.

“Mother,” said the priest, “thou who are so good, couldst thou not send them without being asked?” – “No,” answered the Most Blessed Virgin; “prayer is the condition set by God Himself to obtain graces.” – “So, Mother,” replied the

priest, “wouldst thou thyself teach me how one must pray to thee?” And he received from the Most Blessed Virgin the prayer August Queen “My First duty,” wrote Fr. Cestac, “was to present this prayer to Msgr. Lacroix, Bishop of Bayonne, who condescended to approve it. Having carried out this duty, I had 5,00,000 copies printed and had them sent everywhere.” We must not fail to mention that at the time of the first printing, the printing press broke down twice.

**Imprimatur**
**Camecaci (Cambria), die 26 februarii 1912**
**A.Massart, vic. Gen.**

## 10-ம் வகுப்பு முடித்தவர்களுக்கு VAO மற்றும் அரசு வேலை வாய்ப்பு

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் **(TNBC)** குரூப் 4 மற்றும் **VAO** தேர்வுக்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும்.

### குரூப் 4 தேர்வு மூலம் நிரப்பப்படும் பதவிகள்

**TNBC** குரூப் 4 தேர்வானது தற்போது 7 விதமான பதவிகளுக்கு நடத்தப்படுகிறது. அவை இளநிலை உதவியாளர் **(Junior Assistant),** தட்டச்சர் **(Typist),** சுருக்கெழுத்து தட்டச்சர் **(Steno - Typist),** கிராம நிர்வாக அலுவலர் **(Village Administrative Officer),** வரித் தண்டலர் **(Bill Collector),** நில அளவர் **(Field Surveyor),** வரைவாளர் **(Draftsman).**

### குரூப் 4 தேர்வுக்கான கல்வித் தகுதி

குரூப் 4 தேர்வுகளுக்கு பத்தாம் வகுப்பில் தேர்ச்சி என்பது தான் அடிப்படை கல்வித் தகுதி இருப்பினும் சில பதவிகளுக்கு கூடுதல் தகுதிகளை தேர்வர்கள் பெற்றிருக்க வேண்டும்.

அதன்படி கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், வரைவாளர், நில அளவர், வரித்தண்டலர் ஆகிய பதவிகளுக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி மட்டும் போதுமானது.

ஆனால் தட்டச்சர் பதவிக்கு பத்தாம் வகுப்பு தோச்சி உடன் அரசு தொழில்நுட்ப தட்டச்சு தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை மற்றும் அல்லது முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இதே போல் சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி உடன் அரசு தொழில் நுட்ப தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து இரண்டு தேர்விலும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை மற்றும் / அல்லது முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் தேர்ச்சி பெற்றவர்கள் அனைத்து பதவிகளுக்கும் விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள். எனவே அவர்களுக்கு கூடுதலான வாய்ப்பு உள்ளது.

**குரூப் 4 தேர்வுக்கான வயது வரம்பு**

குரூப் 4 தேர்வுக்கான வயதுத் தகுதி பொதுவாக 18 முதல் 30 வரை ஆகும். இருப்பினும் சில பதவிகளுக்கு வயது வரம்பு தகுதியில் மாற்றம் உண்டு. அதன்படி கிராம நிர்வாக அலுவலர் பணிகளுக்கான வயது தகுதிஇ பொதுபிரிவினருக்கு 21 முதல் 30 வரை பிற வகுப்பினர்களுக்கு 35 வயது வரை சலுகை உண்டு. அதுவே இளநிலை உதவியாளர் உள்ளிட்ட பிற பணிகளுக்குஇ பொதுபிரிவினருக்கு 18 வயது முதல் 30 வரை பிற வகுப்பினர்களுக்கு 35 வயது வரை சலுகை உண்டு.

குரூப் 4 தேர்வு மூலம் நிரப்பப்படும் அனைத்து பதவிகளுக்கும் மேல்நிலை வகுப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு தேர்ச்சி

பெற்றவர்களுக்கு உச்ச வயது வரம்பு இல்லை. அதாவது பத்தாம் வகுப்பிற்கு மேல் படித்தவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

**தேர்வுமுறை**

கொண்டது. எழுத்துத் தேர்வில் மொத்தம் 200 வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் 1.5 மதிப்பெண்கள் என மொத்தம் 300 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறும். குரூப் 4 தேர்வின் வினாத்தாளில் இரண்டு பகுதிகளாக வினாக்கள் கேட்கப்படும். அனைத்து வினாக்களும் கொள்குறி வகையில் **(Objective Type)** கேட்கப்படும்.

**பாடத்திட்டம்**

முதல் பகுதியான மொழிப்பாடப்பிரிவில் இதுவரைஇ தமிழ் அல்லது ஆங்கில மொழிப் பாடங்களில் 100 வினாக்கள் இடம்பெறும். தேர்வர்கள் ஏதேனும் ஒரு மொழிப் பிரிவை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் தற்போது தமிழக அரசு, தமிழ் பாட தாளில் குறைந்தபட்சம் 45 மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றால் மட்டுமே, பிற தாள்களை மதிப்பீடு செய்யும் வகையில் தேர்வு நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது பகுதியில் 100 வினாக்கள் பொது அறிவு பகுதியிலிருந்து கேட்கப்படும். அவற்றில் 75-பொது அறிவு வினாக்களும், 25-திறனறி தேர்வு **(Aptitude Test)** வினாக்களும் இருக்கும்.

**பொது அறிவு பாடங்கள் (General Knowledge)**

**வரலாறு :** சிந்து சமவெளி நாகரிகம், குப்தர்கள், டில்லி சுல்தான். முகலாயர்கள், மராத்தியர்கள், விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்.

**இந்திய அரசியல் :** அரசியலமைப்பு, முகவுரை, அரசியலமைப்பின் சிறப்பம்சங்கள், குடியுரிமை, கடமைகள் மற்றும் உரிமைகள், ஒன்றிய மற்றும் மாநில நிர்வாகம், பாராளுமன்றம், பஞ்சாயத்து ராஜ்.

**அறிவியல் :** இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல்

**புவியியல் :** புவி மற்றும் பிரபஞ்சம், சூரியக் குடும்பம், பருவகாற்றுகள், வானிலை, நீர் ஆதாரங்கள், மண், கனித வளங்கள், காடுகள், வன உயிரினங்கள்.

**பொருளாதாரம் :** ஐந்தாண்டு திட்டங்கள், நிலச்சீர்திருத்தம், வேளாண் மற்றும் வணிக வளர்ச்சி.

**இந்திய தேசிய இயக்கம் :** தேசிய எழுச்சி விடுதலைப் போராட்டத்தில் காந்தி, நேரு, தாகூர், ராஜாஜி, வ.உ.சி, பெரியார், பாரதியார் மற்றும் சில தலைவர்கள்.

**திறனறிவு பாடங்கள் (Aptitude Test)**

தர்க்க அறிவு **(Reasoning)** மற்றும் கணிதத்தைக் கொண்டது. இதில் சுருக்குதல் **(Simplification)**, எண்ணியல் **(Number System)**, அளவியல் போன்ற கணக்கியல் பாடங்கள் உள்ளன. எழுத்துத் தேர்வில் தகுதி பெற்றவர்கள் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவர். அதிலும் தகுதி பெறுபவர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிடங்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

குருப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தேர்வாணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதள பக்கத்தில்

விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கெனவே நிரந்தரப் பதிவு வைத்திருப்பவர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்த தேவையில்லை. விரைவில் தேர்வு குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்டுவதாலும், குருப் 4 தேர்வுக்கான போட்டி கடுமையாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுவதாலும் இதுவரை தேர்வுக்கு தயாராகாதவர்கள் விரைவில் தேர்வுக்காக தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

மேலும் விபரங்களுக்கு : **www.tnpscexams.in**

அருள்பணி. **பூபதி லூர்துசாமி**
செயலர்,
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு - 600 028.

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. B.Edwin Savariyappa | 05-11-1980 |
| 2 | Fr. Y.Arockiasamy | 08-11-1958 |
| 3 | Fr. Yesuraj | 08-11-1964 |
| 4 | Fr. S.Irudayaraj | 08-11-1973 |
| 5 | Fr. S.John Bosco | 09-11-1949 |
| 6 | Fr.S.Anbalagan | 18-11-1980 |
| 7 | Fr. I.Jeevagan | 19-11-1985 |
| 8 | Fr. S.Lua Thomas | 25-11-1978 |
| 9 | Fr. S.Richard Pereira | 25-11-1978 |

## CALENDAR

| | | |
|---|---|---|
| 1 | Mon | All Saints, SOLEMNITY |
| 2 | Tue | All Souls, Feast |
| 4 | Thu | St. Charles Borromeo, B. Memorial |
| 7 | Sun | Thirty-Second Sunday of Ordinary Time |

| | | |
|---|---|---|
| 9 | Tue | Dedication of St. John Lateran, Feast |
| 10 | Wed | St.Leo the Great, Po. & D. Memorial |
| 11 | Thu | St. Martin of Tours, B. Memorial |
| 12 | Fri | St. Josaphat, B. & M. Memorial |
| 13 | Sat | St. Frances Xavier Cabrini, V. Memorial |
| 14 | Sun | Thirty-Third Sunday of Ordinary Time |
| 17 | Wed | St.Elizabeth of Hungary, Rel. Memorial |
| 21 | Sun | Christ the King, SOLEMNITY |
| 22 | Mon | St.Cecilia, V. & M. Memorial |
| 28 | Sun | First Sunday of Advent |
| 30 | Tue | St. Andrew, Apostle, Feast |

**NECROLOGY**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. George Paetta SDB | 02.11.1978 |
| 2 | Rev. Fr. Jesurathinam | 05.11.1995 |
| 3 | Rev. Fr. Stephen Bernard SDB | 07.11.1997 |
| 4 | Rev. Fr. Thomas Selvam SDB | 08.11.1973 |
| 5 | Rev. Fr. George SDB | 09.11.1976 |
| 6 | Rev. Fr. Victor SDB | 10.11.1960 |
| 7 | Rev. Fr. Joseph Murphy SDB | 14.11.1971 |
| 8 | Rev. Fr. Francis Ardusso SDB | 14.11.1994 |
| 9 | Rev. Fr. Joseph SJ | 17.11.1961 |
| 10 | Rev. Fr. S. Velankanni | 20.11.1982 |
| 11 | Rev. Fr. Amirthanathan | 22.11.1996 |
| 12 | Rev. Fr. Joseph Koorkamattam | 23.11.1953 |
| 13 | Rev. Fr. Ignatius Muthu SDB | 23.11.1967 |
| 14 | Rev. Fr. R. Susai Regis | 24.11.2020 |
| 15 | Rev. Bro. Thomas SHJ | 25.11.1981 |

**INTENTION**

People Who Suffer from Depression

We pray that people who suffer from depression or burn-out will find support and a light that opens them up to life.

**Pray for the soul**

**RIP**

1. In your Charity kindly pray for the repose of the soul of Mr. Lawrence (61), beloved maternal uncle of Rev. Fr. P. Gnanaseker and beloved father of Rev. Fr. A. Alphonse (Jamshedpur), who passed away on October 22, 2021.